

Vol.26 | No. 9 | September 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



ANGELS' MEET, TENKASI MISSION, 14.08.2022



FAMILY APOSTOLATE RECOLLECTION, 27.08.2022



VIRUDHUNAGAR FC CONVENT, INAUGURATION AND BLESSING OF RENTED HOUSE, 10.08.2022



KILLIYOOR MARIAN FEAST 09.08.2022



PILANKARAI PARISH FEAST 12.08.2022



ARUKANY CHURCH DOOR BLESSING, 28.08.2022

The Official Organ of the Diocese of Thuckalay
Volume 26 No :9 September 2022



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**Mr. Jesin Joseph**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Jesin J Joseph**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 06 |
| மறைக்கல்வி | 7 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 11 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 13 |
| இல்வாழ்வு இயக்கம் | 16 |
| வின்செண்ட்-தே-பவுல் சபை | 19 |
| சமூக சேவை சங்கம் (KKSSS) | 20 |
| TYES | 22 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 23 |
| மறைமாவட்ட செய்திகள் | 25 |
| மறைவட்ட செய்திகள் | 27 |
| Bishop's Engagements | 39 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/137/2022**

**31 August 2022**

**Dear Readers,**

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

In this circular, I want to reflect with you on the importance that we need to attach to our collaboration with the religious both men and women in the various apostolates that they undertake in our Eparchy. As you are well aware, the presence of religious both men and women is of utmost importance for the life and the mission of any local Church. Their obligation and right to undertake various apostolates in a local Church is the consequence of their belonging to the universal Church and her mission. In fact, in no. 33 of Christus Dominus, we read: "All religious have the duty each according to his proper vocation of cooperating zealously and diligently in building up and increasing the whole church. It constitutes an obligation and a right for religious to undertake works of apostolate in the diocese." This obligation and right of the religious derive from various sources.

The obligation and right of religious to undertake works of apostolate derive, first of all, from their belonging to the people of God by means of their baptismal consecration. The apostolate is the essential mission of the Church and is the very reason of the existence. The duty of all the people of God for the apostolate is declared in the decree Apostolicam Actuositatem. In no. 2, we read: "For by its very nature the Christian vocation is a vocation to the apostolate." Other conciliar documents also declare that it rests upon the entire people of God, by divine mandate, the duty of going into the whole world and preaching the Gospel to every creature. The whole church is missionary and the work of evangelization is a basic duty of the Church and the apostolate is the essential task and raison d'etre of every Christian.

The religious have a greater obligation and right to participate in the apostolate of the Church by virtue of their special vocation and consecration by means of the profession of the evangelical counsels.

The religious consecration is deeply rooted in the baptismal consecration and is an ampler manifestation of it. Therefore, the obligation and right of religious to undertake works of apostolate is greater than that of the ordinary faithful. The religious consecration is a commitment to the apostolate and the profession of the evangelical counsels is the basis for this obligation.

Further, religious life is a vital expression of the charismatic and prophetic character of the Church and they must involve in the renewal of the Church. The purpose of the charism in the Church is not so much the personal good of the person who possesses it, but the common good, that is, the welfare of the Church. The charism of the founders of religious institutes was to meet the pressing need of the Church in their times.

From the very fact that the authority in the Church has accepted and approved the charisms of religious institutes, there arises a greater obligation and a corresponding right to engage themselves in the apostolate of the Church. Through the ecclesiastical approval of these institutes, the Church accepts the presence and activity of such a particular or general charism and recognizes the proper contribution of these religious institutes in the ministry of the Church. By the approval, the Church confides the religious with a sacred ministry and a special work of charity which must be discharged in her name.

The religious vocation which is a call from God is not only for the perfection of religious themselves, but also for filling a need in the Church and in the world. This need in the Church includes the building up and increasing the Mystical Body of Christ and the good of the particular Churches.

We know that there are two forms of religious life, namely, those undertaken by the members of institutes of contemplative life and those undertaken by the members of active life. The religious of contemplative life give themselves to God alone in solitude and silence and through constant prayer and ready penance. On the other hand, in religious institutes of active life, the very nature of religious life requires apostolic action and service since a sacred ministry and a special work of charity has been consigned to them by the Church and must be discharged in her name.

In view of the urgent needs of souls and the scarcity of diocesan clergy, the religious of active life are urged to undertake more external works of apostolate. These external works of apostolate can take various forms according to the particular charism of each

institute. Generally, they refer to those things which pertain to the public exercise to divine worship, the care of souls, and sacred preaching intended for the people, the religious and moral education, catechetical and liturgical formation.

However, when the religious are engaged in the works of apostolate especially when they take up external works of apostolate in the diocese they come in close relationship with the diocesan bishop. This relationship is not merely theological, but also juridical because of the central role that the bishop has in his diocese with regard to the works of apostolate and matters of public order. Since the diocesan bishop bears the weighty responsibilities of teacher, priest and pastor toward the portion of the Lord's flock entrusted to him, he needs the collaboration of whole community. Hence, the religious are called to collaborate with the diocesan bishop in the fulfilment of his pastoral office in a special way. The religious are subject to the bishop in all matters under the care of the bishop, namely, the care of souls, divine worship and the works of apostolate. This does not take away the right of the religious superior in supervising the lives of their members.

In order to avoid unnecessary friction between the diocese and the religious, it is suggested that there should be mutual consultations before deciding upon the apostolates that the religious are to undertake. To facilitate the dialogue religious should be also given membership in the diocesan structures such as the Council of Priests, Pastoral council and other Commissions in the diocese. To assure collaboration of religious for a fruitful apostolate in the diocese, it is recommended that written agreement be drawn up between the competent religious superiors and the local ordinaries.

When the bishop and the religious stand together in mutual love, respect and service, the whole Church is effectively enriched and the growth and development of the local Church is promoted. In such an atmosphere of collaboration, the structure of the local Church would surely tend to make the charisms of religious effective, and the charisms in turn would function in such a way as to avoid any hostility or isolation on the part of either religious or bishop. The special apostolate of the religious carried out in full consideration of the needs of the local Church and the horizons of the local Church would be greatly broadened by the apostolate of the religious.

I can happily say that in our Eparchy, the collaboration that we have with the religious is of high quality and the religious who are present in the Eparchy are very active and their services are praiseworthy.

In fact, they wholeheartedly involve themselves and participate in all the parish and diocese level programmes. They are taking care of the meals of the priests working in the parishes. They take the lead role organising family visits. They serve as catechism teachers and headmistresses; they guide our youth and are actively involved in the various pious associations of the Eparchy. With their particular charisms and life of prayer, the religious enrich our Eparchy. Their eagerness to learn the local language speaks volumes of their love for the Church.

Let us, dear Fathers, appreciate our religious Fathers and Sisters and thank them for their active presence and dedication to the pastoral ministry. Let us also recognise that these congregations require good young men and women to join them. In fact, vocations to congregations of women are on the decline. Let us make a concerted efforts to identify good vocations and encourage them at every stage of their formation spiritually, emotionally, and even financially, if need be. Let us also learn to appreciate the good works of our religious in public forum so that they are encouraged to continue their apostolates in our Eparchy with greater commitment.

During the month of August, we had come together as fellow workers of the Eparchy to celebrate the feast of St John Maria Vianney. This celebration gave us an opportunity to recall our own priesthood and to resolve to live it like St John Maria Vianney by administering the sacraments especially the sacrament of reconciliation with greater dedication as he did. Let us make use of occasions such as feasts of patron Saints of our parishes to boost the faith of our people. In the coming month, we shall celebrate one of the important feasts of Our Blessed Mother, namely, the Nativity of Mother Mary. The celebration of this feast is a wonderful opportunity for us to grow in Marian piety. Let us prepare our people well by encouraging them to keep the 8-day fast with greater earnestness. Let us make the celebration of this feast meaningful in our churches. Kindly keep the mission of the Church and the needs of our Eparchy in your daily prayers.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

BISHOP GEORGE RAJENDRAN sdb ★ Diocese of Thuckalay ★

† George Rajendran SDB

Bishop of Thuckalay

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| எட்டு நாள் நோன்பு துவக்கம் | - செப்டம்பர் 01 |
| கல்லுவிளை ஆலய அர்ச்சிப்பு | - செப்டம்பர் 04 |
| அன்னை மரியாவின் பிறப்பு திருநாள் | - செப்டம்பர் 08 |
| புதுப்பிக்கப்பட்ட ஆலய அர்ச்சிப்பு குருசடி மந்திரிப்பு, வாறுதட்டு | - செப்டம்பர் 10 |
| பங்குத்தந்தை இல்லம் மந்திரிப்பு மற்றும் திருத்தொண்டுப் பணியாளர்கள் கூட்டம், மேக்கரை | - செப்டம்பர் 11 |
| மறைவட்ட அருட்பணியாளர் கூட்டம் | - செப்டம்பர் 12 |
| குருக்களுக்கான தியானம் மற்றும் கூட்டம் | - செப்டம்பர் 13 |
| பல்நோக்க அரங்கு அர்ச்சிப்பு, மதுரை | - செப்டம்பர் 18 |
| குருக்கள் மற்றும் துறவியர் சங்கமம், படந்தாலுமூடு | - செப்டம்பர் 24 |
| மணிமேடை மந்திரிப்பு, தெற்றிவிளை | - செப்டம்பர் 25 |
| CARE YOUR HEART மருத்துவமுகாம், மஞ்சாலுமூடு | - செப்டம்பர் 25 |

**BIRTHDAY OF REV. FATHERS- SEPTEMBER - 2022**

| | |
|---|---|
| Fr. Jose Muttathupadam | 02 |
| Fr. Shoji Puthenpurackal | 23 |
| Fr. Mathew Kuzhinjalil | 28 |




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

---

### *"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன" (உரோ 10:15)*

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

### *விவிலியக் கலைவிழா தலைமைக்குழு கூட்டம்*

மறைமாவட்ட 2022 – 2023 ஆம் மறைக்கல்வி ஆண்டின் விவிலியக் கலைவிழா தலைமைக்குழு கூட்டம் 2022 ஆகஸ்ட் 8 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்களின் தலைமையில் இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர, படந்தாலுமூடு மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஆன்றணி மகேஷ் மற்றும் ஆறுகாணி மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை மார்டின் கண்டபறம்பில் ஆகியோர் முன்னிலையில் முன்னிலையிலும் செபத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர அவர்கள் இந்த வருடம் நடக்கக்கூடிய விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள் பற்றி அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கினார். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகளின் தலைப்பு வயது வரம்பு நிபந்தனைகள் பற்றியும் இசைக்கருவி போட்டிகள் பற்றியும் எடுத்துக்கூறி மறைமாவட்ட விவிலியக் கலைவிழா தலைமைக் குழுவினரோடு கலந்தாலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்கள்

- இசைக்கருவி போட்டிகள் இந்த வருடம் மறைவட்ட அளவிலும் மறைமாவட்ட அளவிலும் நடைபெறும். இசைக்கருவி போட்டிகள் ஜுனியர் மற்றும் சீனியர் பிரிவு மாணவ மாணவிகளுக்கு மட்டுமே நடைபெறும். ஆண் பெண் வேறுபாடில்லை.

- ஜுனியர் பிரிவிலிருந்து 1 ஆண் அல்லது 1 பெண் சீனியர் பிரிவிலிருந்து 1 ஆண் அல்லது 1 பெண் பங்குபெறலாம். இசைக்கருவி போட்டிக்கு இசைக்கருவி வழங்கப்படும்.

- C பிரிவு மறைக்கல்வி நிலைய மாணவர்களுக்கும் 2 தனிப்போட்டிகளில் மட்டுமே பங்கேற்க முடியும்.

- இந்த வருடம் சூப்பர் சீனியர் பிரிவு மாணவர்களின் வயது வரம்பு 20 லிருந்து 19 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

***மறைமாவட்ட தேர்வுக் குழு கூட்டம் மற்றும் வினாத்தாள் தயாரிப்பு***

2022 – 2023 ஆம் ஆண்டுக்கான தேர்வுக்குழு கூட்டம் மற்றும் வினாத்தாள் தயாரிக்கும் பணி 2022 ஆகஸ்ட் 20 சனிக்கிழமையன்று காலை 10.00 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் வைத்து இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர அவர்கள் தலைமையிலும் இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்களின் முன்னிலையிலும் செபத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர அவர்கள் இந்த வருடம் உள்ள வினாத்தாள் பற்றியும் எத்தனை வினாக்கள் எடுக்க வேண்டும் என்பது பற்றியும் கூறினார். இக்கூட்டத்தில் தேர்வுக்குழுவிலுள்ள ஆசிரியர்கள் கலந்துக்கொண்டனர். வினாத்தாள் தயாரிக்கும் பணி காலை 10 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற்றது. அனைவருக்கும் தேனீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.



***தலைமையாசிரியர்கள் கூட்டம்***

தலைமையாசிரியர்கள் கூட்டமானது 2022, ஆகஸ்ட் 31 புதன்கிழமை காலை 10 மணிக்கு படந்தாலுமூடு திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அரங்கில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் அவர்களின் தலைமையிலும் இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர அவர்களின் முன்னிலையிலும் தூய ஆவிப் பாடலுடன் ஆரம்பமானது மாங்கரை

தலைமையாசிரியை அருட்சகோதரி. விமலா SABS அவர்கள் விவிலியம் வாசித்து செபம் செய்தார். திருமதி ஸ்னேகலதா தலைமையாசிரியை வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார், தொடர்ந்து இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திர அவர்கள் தலைமையாசிரியார்கள் மாணவர்களின் விசுவாச வளர்ச்சிக்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என்று அறிவுரை கூறினார். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் பேசுகையில் மாணவர்களின் விவாச வளர்ச்சியில் தலைமையாசிரியர்களும் ஆசிரியர்களும் முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு மாணவர்களையும் குறித்து தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்த வேண்டும், மாணவர்கள் விசுவாச வாழ்க்கைக்கு தேவையான புனிதர்களின் புத்தகங்களை வாசிக்க ஊக்கப்படுத்த வேண்டும், அதற்காக அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நூல் நிலையம் வேண்டும் என்றும் இல்லாத இடங்களில் புதிதாக நூல் நிலையம் தொடங்க வேண்டும் என்றும் அறிவுரை கூறினார். தொடர்ந்து மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கையேடு அடங்கிய Syllabus மற்றும் விவிலியக் கலைவிழா விபரங்கள் அனைத்தும் வாசிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. தேனீர் இடைவேளைக்குபின் அருட்தந்தை அனலின் அவர்கள் மறைக்கல்வி மாணவர்களுக்கு தற்காலிக சூழலுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு எவ்வாறு விசுவாசத்தை கற்பிக்க வேண்டும் என்றும் அதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்று மிக தெளிவான முறையில் *1-30* மணி நேரம் வகுப்புகள் நடத்தினார். தொடர்ந்து இயக்குநர்



அருட்தந்தை அவர்கள் விவிலியக் கலை விழா தலைப்புகளைப் பற்றி தெளிவாக கூறினார்கள். மேலும் இக்கூட்டத்தின் போது கையேடு மற்றும் விவிலியக் கலைவிழா Notice-ம், அதன் Forms வழங்கப்பட்டது. பளுகல் தலைமையாசிரியர் திரு. ஜோஸ் அவர்கள் சிறப்பாக வகுப்பு நடத்திய அருட்தந்தை அனலின் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் நன்றி கூறினார். பின் கூட்டமானது 2.00 மணியளவில் இனிதே முடிவடைந்தது அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது அனைத்து தலைமையாசிரியர்களும் ஊக்குவிப்பாளர்களும் பங்கு பெற்றனர்.

***ஊக்குவிப்பாளர்களின் கூட்டம்***

மறைக்கல்விப் பயிற்சியை முன்னெடுக்கும் நோக்குடன் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊக்குவிப்பாளர்களின் கூட்டமானது 2022 ஆகஸ்ட் 31 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்களின் தலைமையில் படந்தாலுமூடு திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அரங்கில் வைத்து செபத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து இயக்குநர் அவர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊக்குவிப்பாளர்களுக்கு பார்வையிட வேண்டிய விபரங்கள் அடங்கிய படிவங்கள், எப்படி ஒரு மறைக்கல்வி நிலையத்தை பார்வையிட வேண்டும், அதனுடைய வழிமுறைகள் பற்றி தெளிவாக விளக்கி கூறினார். மேலும் அவாகள் பார்வையிட வேண்டிய மறைக்கல்வி நிலையங்கள் அதனுடைய நேரம் அடங்கிய படிவம் அனைத்து ஊக்குவிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டது. பின் கூட்டமானது 4.00 மணியளவில் இறுதி செபத்துடன் இனிதே முடிவடைந்தது.

**அருட்தந்தை.ஜேக்கப் ஐயம்மாத்ற**
**இணை இயக்குநர்**

**அருட்தந்தை. அபிலாஷ் சேவியர்**
**இயக்குநர்**

## FEASTDAYS OF REV. FATHERS - SEPTEMBER - 2022

| | |
|---|---|
| Fr. Lijo thekkel | 21 |
| Fr. Mathew kuzhinjalil | 21 |
| Fr. Mathew thekkekutt | 21 |
| Fr. Matheus robert | 21 |
| Fr. Santhosh kayyalaparampil | 21 |

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில், விண்ணரசு அவர்களுக்கு உரியது."*** (*மத்தேயு 5:3*)

குழந்தை ஈசோ இயக்க பொறுப்பாளர்களின் கூட்டமானது 27.08.2022 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லுவிளை, மறைக்கல்வி நிலையத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் தலைமையில் இறைவணக்க படலுடன் ஆரம்பமானது. படந்தாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர் அருட்சகோதரி பவ்யா CHF வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்,

***இயக்குனரின் அறிவுரைகள்***

கூட்டம் நடத்தும் போது பொறுப்பாளர்கள் கண்டிப்பாக வருகை தர வேண்டும், அனைத்து பங்குகளிலும் சனிக்கிழமைகளில் குழந்தை ஈசோ இயக்கக்கூட்டங்கள் நடத்த முயற்சிக்க வேண்டும், குறைந்தது அரை மணி நேரமாவது கூட்டத்தை நடத்த வேண்டும் எனவும், அதிக நேரம் குழந்தைகளுக்காக மாற்றிவைக்க வேண்டும் எனவும் கூறினார், மேலும் இந்த ஆண்டு மாதிரிப் புனிதராக 'புனித பெர்க்மான்ஸ்" அவர்களை இயக்குநர் தந்தை அவர்கள் அறிவித்தார்கள்.

புனிதரைப் பற்றிய சிறுகுறிப்பு எழுதி குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு பங்கிலும் நடைபெறுகின்ற நிகழ்வுகளை ஒவ்வொரு வாரமும் அறிக்கையாக எழுதி, அந்தந்த மறைவட்ட Whatsapp Group இல், அனுப்ப வேண்டும். அதனை மாத அறிக்கை வடிவில் எழுதி வட்டரப்பொறுப்பாளர்கள் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. மறைவட்டப் பொறுப்பாளர்கள் தேர்வு நடைபெற்றது. ஒவ்வொரு மறைவட்டத்திற்காகவும் தேர்தெடுக்கப்பட்டவர்கள் பின்வருமாறு,

1. ஆறுகாணி - Sr. Lissa SH
2. நித்திரவிளை - Sr Reema SD
3. தக்கலை பிலாங்காலை - St. Ann Maria CMC
4. களியல் - Sr Leena CMC
5. படந்தாலுமூடு - Sr Bhavya CHF
6. சூசைபுரம் - Sr Geo Maria SABS
7. மஞ்சாலுமூடு - Sr. Lins CMC

மேலும், அனைத்து ஆலயங்களிலும் ஒரே மாதிரியான பாடத்திட்டம் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது எனத்தெரிவித்தார். சூசைபுரம் மறைவட்ட பொறுப்பாளர் Sr. Geo Maria SABS அவர்கள் நன்றி கூறினார். இயக்குநர் தந்தையின் ஆசீருடன் கூட்டமானது நிறைவடைந்தது.



இப்படிக்கு
அருட்தந்தை அனில் ராஜ்
இயக்குநர்

## தென்காசி மறைத்தளம்

**புனித தோமையார் ஆலயம் – வாஞ்சிநகர்**
வாஞ்சிநகர் ஆலய திருவிழா ஆகஸ்ட் மாதம் *12,13,14* ஆகிய தேதிகளில் கொண்டாடப்பட்டது. அத்துடன் தென்காசி மறைபரப்பு தளத்தின் வெள்ளி விழாவினை ஒட்டி ஏஞ்சல்ஸ் கூடுகையானது நடைபெற்றது. அன்றைய தினம் தக்கலை மறைமாவட்ட ஆயர் அவர்கள் வருகை தந்து விழாவினை சிறப்பித்தார். நற்கருணை பெற்று ஐந்து வருடங்கள் ஆன மக்களுக்கு சிறப்பு நினைவு பரிசு வழங்கப்பட்டது. இறுதியில் அனைவருக்கும் அன்பு விருந்து வழங்கப்பட்டது.



YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர் இயக்கம் **SMYM**

***தலைமைத்துவ பயிற்சி முகாம்***

சீரோ மலபார் இளையோர் இயக்கம் சார்பாக தலைமைத்துவ பயிற்சி முகாம் 2022 ஆகஸ்ட் மாதம் 19, 20 & 21 ஆகிய தேதிகளில் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. 19ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி அளவில் பெயர் பதிவு ஆரம்பமானது. தொடர்ந்து 10:00 மணி அளவில் பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலய இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். அதைத்தொடர்ந்து மறைமாவட்ட செயற்குழு ஆலோசகர் ஜெஸின் அனைவரையும் வரவேற்று பேசினார். அதை தொடர்ந்து இயக்குனர் தந்தை தொடக்க உரை ஆற்றினார். பின்னர் காலை 10.30 மணி அளவில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமானது. சுல்தான் பேட்டை மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குனர் அருட்தந்தை பிரபின் SDB அவர்கள் முதல் வகுப்பை நடத்தினார். “சமுதாயத்தில் இளையோர்கள் எப்படி வாழ வேண்டும் என்றும் அவர்கள் சந்திக்கின்ற தடைகள் குறித்தும், இடையூறுகள் குறித்தும், சமூகத்தில் எப்படி புதிய மாற்றத்தை கொண்டு வரலாம், திருச்சபை இன்றைய இளையோர்களிடத்தில் எதிர்பார்பது என்ன” என்று வகுப்புகள் நடத்தினார். அன்று மாலை 6:30 மணியளவில் அருட்தந்தை அருள் ஆண்டனி SDB அவர்கள் நடுவராக பங்கேற்ற 'இன்றைய உலகில் சமூக ஊடகங்கள் நன்மையா? தீமையா?' குறித்து மாபெரும் விவாதம் நடைபெற்றது. இரவு 8:30 மணிக்கு இரவு உணவுக்கும் பின் சிறு விளையாட்டுகள் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.



20 ஆம் தேதி சனிக்கிழமை காலை 6:30 மணிக்கு மனதை ஒருநிலைப்படுத்துவதற்கானப் பயிற்சியும் அதை தொடர்ந்து 7 மணி அளவில் இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து காலை 9:30 மணிக்கு அருட்தந்தை ஜாண் மார்சல் SDB அவர்கள் பயிற்சி வகுப்பினை வழிநடத்தினார். இதில் "தகவல் பரிமாற்றம் என்பது எப்படி இருக்க வேண்டும் என்றும் ஒவ்வொருவருக்கும் தனி திறமைகள் உண்டு, அதனை வெளிக்கொண்டு வருவது குறித்தும், நாம் தனிப்பட்ட திறமைகளை வெளிகொண்டு வருவது எப்படி என்றும், காதல் விவகாரங்களில் சமாளிக்கும் திறன் குறித்தும்" கலகலப்பான முறையில் பயிற்சி வகுப்பு நடத்தினார். அன்றைய தினம் மாலை 4:30 மணிக்கு அருட்தந்தை.ஜாண் மார்சல் SDB அவர்கள் நடுவராக பங்கேற்ற மாபெரும் விவாத மன்றம் நடைபெற்றது. இதன் தலைப்பு 'இன்று நாம் காண்பது, கற்பது, அனுபவிப்பது காமமா? காதலா? அதன் பின் இரவு 8 மணி அளவில் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் பாடல் எழுதுதல், விளம்பரம் ஒப்புவித்தல் போன்றவை நடைபெற்றன.




இரவு 10 மணி அளவில் அன்றைய தினம் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றது.

21ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7 மணிக்கு காலை ஜெபம் நடைபெற்றது. மறைமாவட்ட ஆவணகாப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. பின்னர் காலை 9:30 மணி அளவில் அருட்தந்தை.அருள் ஆண்டனி SDB அவர்கள் பயிற்சி வகுப்பினை நடத்தினர். இதில் முக்கியமாக பலம், பலவீனம் எது என்பதை


கண்டுபிடிக்கவும் SWOT Analysis என்னும் சுய பரிசோதனை பயிற்சி நடைபெற்றது. மதியம் 1:00 மணி அளவில் பயிற்சி வகுப்புகள் நிறைவடைந்தது. அதைத்தொடர்ந்து மதியம் 2:00 மணி அளவில் அனைவரும் தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இயக்குனர் அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்கள் நிகழ்ச்சிக்கான நோக்கம் குறித்தும் இதற்கான அடுத்த கட்ட திட்டங்கள் குறித்தும் விளக்கி கூறினார். மஞ்சாலுமூடு மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை.ரோபின் ஜோஸ் இளையோர்களை ஊக்கபடுத்தும் விதமாக எழுச்சியுரை ஆற்றினார். மறைமாவட்ட துணை செயலர் மெர்னிஷா அனைவருக்கும் நன்றி கூறினார். பின் இயக்க கீதத்துடன் பயிற்சி வகுப்புகள் இனிதே நிறைவு பெற்றது. இதில் சுமார் 35 இளையோர்கள் கலந்து கொண்டனர். திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டி இயக்குனர் அருட்தந்தை. அருள் ஆண்டனி SDB மூன்று நாட்கள் உடனிருந்து ஒருங்கிணைத்தார். இயக்குனர் அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்கள் மற்றும் மறை மாவட்ட பொறுப்பாளர்கள் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

### *தொடர் உருவாக்கல் பயிற்சி முகாம்*

சீரோ மலபார் இளையோர் இயக்கம் சார்பாக தலைமைத்துவ பயிற்சி முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளையோர்களுக்கான பயிற்சி முகாம் ஆகஸ்ட் 31 ஆம் தேதி கல்லுவிளை SMYM அலுவலகத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமானது. டோன் போஸ்கோ வழிகாட்டி இயக்குனர் அருட்தந்தை அருள் ஆண்டனி SDB அவர்கள் இணையம் வழியாக தொடக்கவுரை நடத்தினார். அதன் பின்பு திருச்சி டோன் போஸ்கோ வழிகாட்டி ஒருங்கிணைப்பாளர் சகோதரர் ராஜா அவர்கள் வகுப்புகளை நடத்தினார். பின்பு தக்கலை மறை மாவட்ட SMYM இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் நமது இயக்கத்தின் நோக்கம் பற்றியும், Youcat புத்தகத்தின் வரைமுறைகள் பற்றியும், அதனுடைய உள்ளார்ந்த கருத்துகள் பற்றியும், விவரித்து கூறினார். அதன் பின்பு நாம் அலகு சந்திப்பு நிகழ்ச்சியில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும், எவ்வாறு நாம் அதை நடத்த வேண்டும் என்றும், பயிற்சி வகுப்புகள் நடத்தினார். மாலை 3 மணி அளவில் இறுதி ஜெபத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

இவண்
மெரின் சுஜித், செயலர்

# இல்வாழ்வு இயக்கம்



அன்பையும், ஆறுதலையும் தந்து இன்பங்களையும், துன்பங்களையும் பகிர்ந்து ஒருவருக்கொருவர் புரிந்து சிரிப்பும், புன்னகையும் முகத்தில் மலர்ந்து ஒரு வீட்டில் ஒன்றாய் வாழும் குடும்பத்தில் என்றும் மகிழ்ச்சி நிறைந்திருக்க இறைவனிடம் செபிக்கின்றோம்.

### *இல்வாழ்வு இயக்கம்*

அனைவரின் வாழ்க்கையிலும் குடும்பம் முக்கியமான ஒன்றாகும். குடும்பத்தின் அன்பும், ஆதரவும் நம்முடைய வாழ்க்கைக்கு மிகவும் அவசியம். நம்முடைய கஷ்ட நேரங்களில் நம் குடும்ப உறுப்பினர்களே நமக்கு உறுதுணையாக இருப்பார்கள். குடும்ப உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பாகும். ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து அக்கறை கொண்டு அன்பை பரிமாறி குடும்பத்தோடு ஒன்றாய் இணைந்து வாழ்ந்தால் அந்த குடும்பத்தில் இன்பங்கள் நிறைந்திருக்கும். இப்படிப்பட்ட குடும்பத்தை உருவாக்க இல்வாழ்வு இயக்கம் குடும்பங்களுக்கு உறுதுனையாக இருந்து செயல்பட்டு வருகிறது.

### *ஆற்றுப்படுத்தல் சேவை*

குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல்களும், அறிவுரைகுளும் தேவை. இந்நோக்குடன் எமது அலுவலகத்தில் அருள் கொடை பெற்ற அருட்தந்தை மற்றும் கன்னியர்களால் ஆலோசனையும், ஆற்றுப்படுத்துதலும் அறிவுரையும் கொடுக்கபடுகிறது. மேலும் குடிநோய் மற்றும் மனநோயாளிகளுக்கு மருத்துவரின் ஆலோசனைகளும் சிகிட்சையும், மருந்துகளும் வழங்கப் வரப்படுகிறது.

### *மாதர் ஜோதிஸ் இயக்கம்*

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக ஆகஸ்ட் 14 ஆம் தேதி பிற்பகல் 2 மணியாளவில் இயக்குநர் தந்தை அவர்களும் அருட்சகோதரி றோஸ் சிரியன்கண்டத் CHF அவர்களும் பளுகல், புனித தோமையார் ஆலயத்தில் உள்ள தாய்மார்களை சந்தித்து நிறை குறைகளை கேட்டறிந்தனர். பின்னர் அவர்களுக்கு குடும்ப வாழ்கையைப் பற்றியும், இறைவழியில் குடும்பங்களை எப்படி கொண்டு செல்ல வேண்டும் என்பதை பற்றியும் வகுப்புகள் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில்

சுமார் 60 தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட பெறுப்பாளர் கூட்டம் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து ஆகஸ்ட் 19 ம் தேதி காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தை இயக்குநர் தந்தை மற்றும் அருட்சகோதரி ஆகியோர் பொறுப்பேற்று நடத்தினார். இக்கூட்டத்தில் தொடர்ந்து நடக்கவிருக்கின்ற தியானத்தை பற்றி விவாதிக்கப்பட்டது. சுமார் 15 பெறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தாய்மார்களுக்கான ஒரு நாள் தியானம் ஆகஸ்ட் 27 ம் தேதி சனிக்கிழமை அருட்தந்தை. மார்டின் ராஜா CPPS (St. Gasper Retreat Center, Bangalore) தலைமையில் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இத்தியானத்தை மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தொடங்கி வைத்து துவக்க உரை ஆற்றினார். அப்போது பேசுகையில் தாய்மார்கள் குடும்பத்தின் ஒளி என்றும் தாய்மார்கள் பிள்ளைகளுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்றும் கூறினார்கள். இத்தியானத்தில் ஆற்றுப்படுத்துதல், பாவசங்கீர்த்தனம் நோய்களில் இருந்து விடுபட விடுதலை ஜெபம் நற்கருணை ஆராதனை மற்றும் திருப்பலி நடைபெற்றது. கலந்துகொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இத்தியானத்தில் சுமார் 400 தாய்மார்கள் கலந்து கொண்டனர்.



***திருமண ஆயத்தப் பயிற்சி***

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது ஆகஸ்ட் 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் 10 இளைஞர்கள் பங்கேற்று பயன் அடைந்தார்கள்.

**அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்**

**இயக்குநர்**




# வின்சென்ட்- தே-பவுல் சபை

***வினாடி வினா போட்டி***

தக்கலை மத்திய பேரவையின் வெள்ளி விழாவை ஒட்டிய "வின்செந்திய வினாடி வினாப் போட்டி "சூசைபுரம் மறைவட்டத்தில் 14-8-2022 அன்று மதியம் 2.30 மணிக்கு நடைபெற்றது. போட்டியின் நிகழ்வுகளை சூசைபுரம் வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஆன்றணிஜோஸ், மற்றும் உதவி பங்குதந்தை அருட்தந்தை. ஜோஸ் புரையிடத்திக்குந்நேல் ஆகியோர் ஜெபத்துடன் துவங்கி வைத்தனர். சூசைபுரம் வட்டார சபைக்கு உட்பட்ட கிளைச் சபைகளில் இருந்து முப்பதுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். வட்டார சபை தலைவர் சகோ. பிரபு அவர்கள் போட்டியின் நிகழ்வுகளை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



பிலாங்காலை வட்டார சபையில் 21-8-2022 அன்று பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இளைஞர் கிளைச்சபை "புனித மரிய கொறட்டி" பெயரில் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை. ஜோண்சிலால் அவர்கள் முன்னிலையில் துவங்கப்பட்டது. சகோதரி. லூயிசா மெர்சி அவர்கள் இளைஞர் கிளைச்சபை தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் மத்திய சபை விரிவாக்க அலுவலர் சகோ. கிறிஸ்துதாஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பாக கிளைச் சபையை வழிநடத்த அறிவுரை வழங்கினார்கள். இந்நிகழ்வை பிலாங்காலை வட்டார சபை தலைவர் சகோ.கிறிஸ்துதாஸ் அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



சூசைபுரம் வட்டார சபைக்கு உட்பட்ட "திருக்குடும்பம் சிறுவர் கிளைச்சபை" சார்பில் சிறார்களை ஊக்குவிக்கும் வண்ணம் 28.08.2022 அன்று உறுப்பினர்கள் திருவிதாங்கோடு அரைப்பள்ளிக்கு திருப்பயணம் மேற்கொண்டனர். ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஆன்றணி மாடப்புரைக்கல் அவர்கள் ஜெபத்துடன் இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். திருவிதாங்கோடு அரப்பள்ளி புனித தோமையார் மறைபரப்பு பணிக்காக எழுப்பிய ஏழு ஆலயங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.



***வெள்ளிவிழா நிறைவு விவிலியப் பவனி***

தக்கலை மத்திய சபையின் வெள்ளி விழாவையொட்டிய "திருவிவிலிய ஒளிச்சுடர் மஞ்சாலுமூடு  வட்டார சபையிலிருந்து 21.08.2022 முதல் ஆறுகாணி வட்டார சபைக்குட்பட்ட ஆலயங்களில் பவனியாக எடுத்து செல்லப்பட்டு செபம் செய்து வருகிறார்கள்

தகவல் சேகரிப்பு<br>
D. P. ஷாஜி<br>
தகவல் தொடர்பு அலுவலர்

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

***ஆரி மற்றும் தையற்கலை***

KKSSS சார்பில் ஆரி மற்றும் தையற்கலை ஒரு மாத முழு நேர பயிற்சி முகாம், தக்கலை மற்றும் கல்குறிச்சி ஆகிய இடங்களில் வைத்து ஆகஸ்ட் 8 தேதி தொடங்கி 16 வரை நடைபெற்றது. இதில் தக்கலையில் தொடக்க நிகழ்வு KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையிலும், KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை ஆன்றனி மகேஷ் முன்னிலையிலும் நடைபெற்றது. அப்போது தலைமையுரையாற்றும் போது இந்தியாவின் பாரம்பரிய, ஆடை, சேலை. ஆகியவற்றின் மாதிரியில் தற்போது சந்தையில் பெண்களுக்கென, நேர்த்தியான அழகு வாய்ந்த புதிய ஆடைகள் வந்துள்ளன. அதற்கேற்ற ஜாக்கெட்டுகளும் வந்திருக்கின்றன. அவற்றை நம்மாலும் செய்ய முடியும் என்றார். பயிற்சியை, தையல் மற்றும் ஆரி கலை ஆசிரியர் ஸ்ருதி அவர்கள் கொடுத்தார்கள். இதில் 28 நபர்கள் பயிற்சி பெற்றனர். கல்குறிச்சியில் KKSSS துணை இயக்குநர். அருட்தந்தை மகேஷ் ஆன்றனி மேற்பார்வையில் தையல் மற்றும் ஆரி கலை பயிற்சி; ஆசிரியர் சரஸ்வதி அவர்களால் கொடுக்கப்படுகிறது. இதில் 22 நபர்கள் பயிற்சிப் பெறுகிறார்கள். இத்தொடர்பயிற்சி செப்டம்பர் 15 தேதி நிறைவுறுகிறது.

***நிறைவு விழா - Aari***

Migration திட்டத்தின் மூலம் KKSSS மற்றும் மஞ்சாலுமூடு லிட்டில் ப்ளவர் திறன் வளர் மையம் இணைந்து நடத்திய ஆரி மற்றும் தையற்கலை ஒரு மாத முழு நேர பயிற்சி முகாம் நிறைவு விழா பள்ளிக்கோணம் திருஇருதய ஆலய அரங்கத்தில் வைத்து ஆகஸ்ட் 6 தேதி நடைபெற்றது. இதில் KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமை ஏற்றார். சிறப்பு விருந்தினராக மஞ்சாலுமூடு லிட்டில் ப்ளவர் திறன் வளர் மைய இயக்குநர் பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில், பள்ளிக்கோணம் திருஇருதய ஆலய பங்குதந்தை அருட்தந்தை லுக்கா கொல்லம்பறம்பில் மற்றும்

KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆன்றனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அப்போது தலைமையுரையாற்றும் போது சுதந்திரமாக தொழில் நடத்த ஏற்றது என்ற முறையில் ஆரி மற்றும் தையற்கலை முன்னிலையில் நிற்பதை யாவரும் அறிவர். பெண்கள் யாவரும் பயிற்சியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதே எம் நோக்கம். இன்றைய சுய வேலை வாய்ப்புக்கு இந்த கலை ஏற்றதாகவும் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் செலவழிக்க பெண்களுக்கு ஏற்ற தொழில் இது என்றும் கூறினார். ஓய்வு நேரத்தை வீணாக கழிக்காமல் ஒரு மாத பயிற்சி வருவாய் ஈட்டி குடும்ப செலவை சரி செய்ய உதவியாக அமையட்டும் எனக் கூறினார். தொடந்து அருட்தந்தை லுக்கா கொல்லம்பறம்பில் அவர்கள் இனி நிரந்தர தையற்கலை பயிற்சி மையம் செயல்படும் என தெரிவித்தார்கள். இடையிடையே கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் 29 பயனாளிகள் பங்கு பெற்றனர்.

### *CTWWC-2 Training*

Changing the way we care திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிகழ்வு மூன்று நிலைகளாக ஆகஸ்ட் 24 ஆம் தேதி நடைபெற்றது. காலையில் TASOSS அமைப்பின் இயக்குநர் ஆல்பர்ட், இணை இயக்குநர் ஆரோக்கியசாமி CRS இன் தமிழ்நாடு திட்ட பணியாளர் ஜோமி ஆகியோர் தலைமையில் மூன்று குழுவாக தடிக்காரகோணம், மாறப்பாடி மற்றும் மெதுகும்பல் ஆகிய பகுதிகளிலுள்ள CTWWC திட்ட பயனாளிகள் இல்லத்தினை பார்வையிட்டனர். தொடர்ந்து மாதாபுரம் பகுதியில் மக்களை சந்தித்து குடும்பத்தின் முக்கியத்துவம் உறவுகளின் முக்கியத்துவம் குழந்தை வளர்ப்பு, பெற்றோரின் கடமைகள் குடும்பத்தை வலுப்படுத்தல் போன்ற தலைப்புகள் பற்றி விவாதித்தனர். தொடர்ந்து KKSSS அலுவலகத்தில் வைத்து பணியாளர்கள் செயல்பாடுகளை விவாதித்தனர். KKSSS இயக்குனர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் இந்திய CRS திட்ட அலுவலர் விஜயலெஷ்மி CRS, CTWWC திட்ட அலுவலர் நிவேதிகா மற்றும் CTWWC பணியாளர்கள் உடன் இருந்தனர். இந்த திட்டத்தை மிக சிறப்பாக செயல்படுத்தியதற்காக KKSSS இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் மற்றும் திட்ட ஒருங்கினைப்பாளர் அருட்சகோதரி மெரின் அவர்களையும் CRS மற்றும் TASOSS பொறுப்பாளர்கள் பாராட்டினார்கள்.

**அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்**

**செயலர்**

# தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம்
Thuckalay Youth Educational Services in Collaboration with Trichy Vazhikatti

***பள்ளி மாணவர்களுக்கான பயிற்சி முகாம்.***

ஆகஸ்ட் மாதம் 4 தேதி கார்மல் மாதா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. காலை 10 மணி அளவில் தக்கலை மறைமாவட்டத்தின் இளையோர் இயக்க இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் TYES ஒருங்கிணைப்பாளர் ஸ்டார்வின் அவர்களால் வழிநடத்தப்பட்டது. காலை 10 மணி அளவில் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி



மற்றும் மதியம் 1:30 மணி அளவில் 8 மற்றும் 9 வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி வகுப்பும் நடைபெற்றது. இதில் முக்கியமாக மாணவர்களுக்கு தொலைபேசியின் தீமைகள் பற்றியும் மேலும் சமூகத்தில் நாம் எப்படி செயல்பட வேண்டும் என்பதைப்பற்றியும் வகுப்பு நடத்தினர். ஸ்டார்வின் அவர்கள் சிறு நடனம் மற்றும் விளையாட்டுகள் நடத்தி மாணவர்களை உற்சாகமுடன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வழிவகை செய்தார். வகுப்பிற்கு தேவையான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகம் சிறப்பாக செய்திருந்தது.

ஸ்டார்வின்

ஒருங்கிணைப்பாளர்

# அருட்சகோதரர்களிடமிருந்து


"எங்கள் கடவுள் எவ்வளவு நல்லவர்! நம்மால் அவரை அடைய முடியாதபோது, அவர் நம்மை நோக்கி வருகிறார்."
- புனித ஜான் மரிய வியானி

புனித ஜான் மரியா வியானியின் திருவிழா அனைத்து குருமடங்களிலும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடைபெற்றன. விழாவையொட்டி அருட்சகோதரர்களுக்கான ஒரு நாள் சுற்றுலா பயணம் நடைபெற்றது

அன்னையின் விண்ணேற்பு விழா மற்றும் சுதந்திர தின விழா அனைத்து குருமடங்களிலும் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அருட்சகோதரர்கள் தங்கள் மேய்ப்புப் பணியை மிகுந்த ஆர்வத்துடனும், அன்புடனும் செய்து வருகின்றனர்.

ஆலுவா, டோண் போஸ்கோ குருமடத்தில், பெங்களூர் சலேசியன் மாகாணத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜாய் SDB அவர்கள் தலைமையில் 'An Introduction on Cathect' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. ஜூலை 16 ஆம் தேதி கார்மல் அன்னையின் திருவிழாவோடு இணைந்து, மரியன்னை மாத தொடக்க விழா நடைபெற்றது. இது ஆகஸ்ட் 15 ஆம் தேதி மரியாவின் விண்ணேற்பு திருநாள் கொண்டாடட்டங்களுடன் நிறைவுற்றது. மரியன்னை மாதத்தில் அன்னை மரியாவை போற்றும் வகையில் பஜனை, பல்வேறு மன்றாட்டுக்கள், ஜெபமாலை,



விளையாட்டுகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதோடு சேர்ந்து நடந்த போட்டியில் சகோ அபிஷ்வின் கட்டுரை போட்டியில் முதல் பரிசு பெற்றார்.

நமது மறைமாவட்ட ஆயர் அவர்கள் மங்கலப்புழா மற்றும் வடவாதூர் குருமடங்களுக்கு சென்று அருட் சகோதரர்களை சந்தித்தார். சகோதரர்கள் அனைவரும் ஆயரை வரவேற்று உரையாடுவதில் மகிழ்ச்சியடைந்தனர். மங்கலப்புழாவில் கற்கும் சங்னாச்சேரி அருட்சகோதரர்களும் ஆயர் அவர்களை தங்கள் சமூகத்திற்கு மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றனர்.

அருட்சகோதரர் பிரின்ஸ் தனது 'திருப்பலி' தேர்வை வெற்றிகரமாக முடித்தார். மங்கலப்புழா குருமடத்தில் Home Day கொண்டாட்டங்கள் மற்றும் போட்டிகள் நடைபெற்று வருகிறது.

ஆகஸ்ட் மாதம் ரூஹாலயா குருமடத்தில் புதிய அருட்தந்தையர்கள் தின விழா நடைபெற்றது. கொரோனாவால் நிறுத்தி வைக்கப்பட்ட கிராமக் குழந்தைகளுக்கானப் பயிற்சிகள், கிராம மக்களை சந்தித்தல், சிறையில் இருப்போரை சந்தித்தல் போன்ற பணிகள் மறுபடியும் தொடங்கப்பட்டுள்ளது. இத் திருத்தொண்டு பூர்வீக கலாச்சாரம், நம்பிக்கைகள் மற்றும் தார்மீக விழுமியங்களின் அனுபவங்களை வழங்குகின்றது.

ரூஹாலயா குருமடத்தின் மெய்யியல் பயிலும் மாணவர்கள் வரும் நாட்களில் தங்கள் பல்கலைக்கழக தேர்வுகளை எழுத உள்ளனர். நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற அவர்களை நமது ஜெபங்களில் நினைவு கூர்வோம்.

நமது மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் குந்நோத் குருமடத்திற்கு வருகை புரிந்து சகோதரர்களுடன் திருப்பலி நிறைவேற்றினார். சகோ லிஜு ஒப்புரவு அருளடையாள தேர்வை வெற்றிகரமாக முடித்தார்.

அருட் சகோதரர் ஆல்வின் மற்றும் ஜூபின் ஆகியோர் ரோமில் தங்கள் படிப்பைத் தொடங்கியுள்ளனர்.

தக்கலை மறைமாவட்டத்திற்கு ஒரு சிறந்த மற்றும் புனிதமான அருட்பணியாளராக மாற எங்களை உருவாக்குவதற்கு இந்தப் பயிற்சி காலகட்டத்தில் முன்னோக்கிச் செல்ல உங்கள் ஜெபங்கள் தேவை. எனவே எங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கவும், நாங்களு உங்களுக்காக தினமும் ஜெபிக்கிறோம்.

சகோ. ஆண்டனி தகிடியேல்

# மறைமாவட்டச் செய்திகள்

## வியானி திருவிழா கொண்டப்பட்டம்

அனைத்து குருக்களின் பாதுகாவலரான புனித ஜாண் மரியா வியானியின் திருவிழா சிறப்பான முறையில் முக்கூட்டுக்கல் புனித மரியா இளங்குருமடத்தில் வைத்து 2022, ஆகஸ்ட் 04 அன்று நடந்தது. அருட்தநந்தையர்களும் அருட்சகோதரர்களும் பங்கேற்ற விளையாட்டுப் போட்டி காலையில் நடைபெற்றது. பின்னர் ஆராதனையுடன், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்தில் அருட்சகோதரர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. மதிய உணவுடன் விழா நிறைவுற்றது. இளங்குருமட அதிபர் ஜோகி மரங்காட்டு CMI அவர்கள் நிகழ்வுகளை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## கன்னியர் இல்ல அர்ச்சிப்பு – விருதுநகர்

இடுக்கி மாகாணத்தின் FCC சகோதரிகள் விருதுநகர் மாவட்டத்தில் ஒரு வாடகை வீட்டில் 2022 ஆகஸ்ட் 10 அன்று முதல் இறைபணியை தொடங்கியுள்ளனர். அன்றைய தினம் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் வாடகை இல்லத்தை மந்திரித்து வைத்தார். இடுக்கி மாகாணத்தின் தலைவி அருட்சகோதரி சுகுணா FCC, கூரியா உறுப்பினர்கள் மற்றும் அருட்தந்தையர்கள் அரசியல் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். அருட்தந்தை பீட்டர் கிழக்கேயில் மற்றும் அருட்தந்தை ஆகாஷ் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர்

## பொன்விழா கொண்டாட்டம் – தெற்றியோடு

தெற்றியோடு புனித பவுல் தேவாலயம், 13 செப்டம்பர் 2022 அன்று அதன் பொன்விழாவை நிறைவு செய்தது. ஜூபிலி ஆண்டு கொண்டாட்டங்களின் நிறைவு ஆகஸ்ட் 9 ஆம் தேதி தொடங்கி 15 ஆம் தேதி முடிவடைந்தது. திருவிழா கொண்டாட்டத்தின் ஆறாம் நாளான ஆகஸ்ட் 14 அன்று, மறைமாவட்ட ஆயர் தலைமையில் திருப்பலி நடைபெற்றது, ஜூபிலி நிறைவு மதநல்லிணக்க விழா நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோசப் பிரைட் மற்றும் FCC Sanjoe மாகாண அருட்சகோதரிகள், உள்ளூர் இந்து, முஸ்லிம் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். அதே நாளில் பொன்விழா நினைவு மலர் வெளியிடப்பட்டது.

### மறைவட்ட அளவில் குருக்களுக்கான கூட்டம்

மறைவட்ட அளவில் குருக்களுக்கான கூட்டம் 2022 ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் முறையே மஞ்சாலுமூடு-களியல்-ஆறுகாணி மறைவட்டங்களின் கூட்டம் பத்துகாணி ஆலயத்திலும், சூசைபுரம்-பிலாங்காலை மறைவட்டங்களின் கூட்டம் பாலப்பள்ளம் ஆலயத்திலும், நித்திரவிளை-படந்தாலுமூடு மறைவட்டங்களின் கூட்டம் வயலங்கரை ஆலயத்திலும் நடைபெற்றது. அனைத்து கூட்டங்களுக்கும் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார்.

### ஆயர் பேரவை 2022

சீரோ மலபார் திருச்சபையின் ஆயர் பேரவை 2022 ஆகஸ்ட் 16 முதல் 25, வரை காக்கநாடு மவுண்ட் செயின்ட் தாமஸ் நடைபெற்றது. சீரோ மலபார் வழிபாட்டுத் துறையில் விலைமதிப்பற்ற பங்களிப்பைச் செய்பவர்களுக்கு பௌரஸ்திய ரத்தினம் விருதை நிறுவ ஆயர் பேரவை முடிவு செய்துள்ளது. திருச்சபை இளைஞர்களுடன் நடக்க வேண்டும் என்றும் மதிப்பிடப்பட்டது.

### ஆலய முன் வாயில் மந்திரிப்பு – ஆறுகாணி

ஆறுகாணி திருக்குடும்ப மறைவட்ட தேவாலயத்தின் புதிதாக அமைக்கப்பட்ட பிரதான நுழைவு வாயில் 28 ஆகஸ்ட் 2022 அன்று மதியம் 02.30 மணிக்கு அர்ச்சிக்கப்பட்டது. தொடர்ந்து ஆயர் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. ஆறுகாணி, களியல், மஞ்சாலுமூடு ஆகிய மறைவட்டங்களை சேர்ந்த அருட்தந்தையர்கள் மற்றும் சகோதரிகள் கலந்து கொண்டனர்

### அருட்தந்தையர் பேரவை பொதுக்குழு கூட்டம்

அருட்தந்தையர் பேரவையின் பொதுக்குழு கூட்டம் 30 ஆகஸ்ட் 2022 அன்று தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. ஆயர், கூரியா உறுப்பினர்கள் பங்கேற்க கூட்டம் நடைபெற்றது.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

ஆகஸ்ட் 21 அன்று மூன்று ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றிய பேரருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்களுக்கு பிரியாவிடை பங்கு மக்கள் சார்பாக கொடுக்கப்பட்டது. ஆகஸ்ட் 25 அன்று காலை சுமார் 7.30 மணியளவில் அவரை புதிய பணித்தளமான தென்காசி மறை பரப்புதளத்திற்கு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பங்கு மக்கள் வழியனுப்பி வைத்தார்கள்.

ஆகஸ்ட் 25 அன்று காலை 8.30 மணியளவில் பேரருட்தந்தை தோமஸ் சத்யநேசன் அவர்கள் திரு இருதய மறைவட்ட ஆலயத்தின் புதிய பங்கு தந்தையாக தக்கலை மறைமாவட்டத்தின் ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

### மார்ட்டின் டி போரஸ் ஆலயம் – கழுவந்திட்டை

ஆகஸ்ட் 07 அன்று பங்குத் தந்தை அருட்தந்தை ஜெஸ்டின் தலைமையில் பங்குப் பேரவை கூட்டமும் இளையோர் இயக்க கூடடமும் மாதர் ஜோதிஸ் இயக்க கூட்டமும் நடைபெற்றது. பேரவை கூட்டத்தில் மறைக்கல்வி மாணவர்கள் ஆர்வமுடன் திருப்பலியில் கலந்து கொள்ள அனைவரும் முயற்சி செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது

ஆகஸ்ட் 04 அன்று பங்குதந்தையர்களின் பாதுகாவலராகிய புனித ஜாண் மரிய வியானி திருநாளையொட்டி ஆடம்பர திருப்பலி நடைபெற்றது.

ஆகஸ்ட் 15 அன்று மாதாவின் விண்ணேற்பு திருநாள் காலையில் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது, திருப்பலிக்கு பின் 75 ஆவது சுதந்திர தின விழாவையொட்டி பங்குத்தந்தை அவர்கள்

தேசியக் கொடியை ஏற்றினார். பின்னர் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

### புனித மத்தேயு ஆலயம் – அண்ணிக்கரை

ஆகஸ்ட் 12 அன்று மாலை இளையோர்களுக்கான தியானம் நடைபெற்றது. இந்நிகழ்வை அருட்தந்தை ஆண்டனி மகேஷ் அவர்கள் வழி நடத்தினார்கள். ஆலய திருவிழாவையொட்டி பங்குத்தந்தை அனைத்து வீடுகளையும் சந்தித்தார்.

### புனித சூசையப்பர் ஆலயம் - வளன்நகர்

ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு என்ற தலைப்பில் மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான கருத்தரங்கு 28.8.2022 அன்று மாலை நடைபெற்றது. இந்நிகழ்வை அருட்சகோதரி டயானா SDS அவர்கள் வழிநடத்தினார்கள்.

ஆகஸ்ட் 15 அன்று மாதாவின் விண்ணேற்பு மற்றும் சுதந்திர தினவிழாவையொட்டி திருப்பலி நடைபெற்றது. பின்பு குருசடியில் வைத்து ஜெபமாலை ஜெபிக்கப்பட்டது 75 வது சுதந்திர தின விழாவையொட்டி அருட்தந்தை ஆன்றணி மகேஷ் அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். பின்பு அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## மஞ்சாலுமூடு

### திருக்குடும்ப ஆலயம் – முக்கூட்டுகல்

முக்கூட்டுகல் திரு குடும்ப ஆலயத்தில் சுதந்திர தின விழா மற்றும் மாதாவின் விண்ணேர்ப்பு தின கொண்டாட்டம் ஆகஸ்ட் 15 அன்று கொண்டாடப்பட்டது.

### புனித பெனடிக்ட் ஆலயம் – பென்கிரி

புனித பெனிடிக்ட் ஆலயம் பெங்கிரியில் 8.7.2022 அன்று 'யூத் மிஷன்' என்ற புதுமுயற்சி ஆலய இளைஞர்களால் துவங்கப்பட்டது. இளைஞர்கள் சேர்ந்து வீடுகள் சந்தித்து குடும்பங்களுக்காக

ஜெபிக்கின்றனர். யூத் மிஷனை பங்கு தந்தை அவர்கள் வழிநடத்தி வருகின்றார். பென்கிரியில் புனித பெனடிக்ட் ஆலயத்தில் ஆகஸ்ட் 15 அன்று சுதந்திர தினம் மற்றும் மாதாவின் விண்ணற்பு தினமும் கொண்டாடப்பட்டு அனைவர்க்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## தக்கலை–பிலாங்காலை

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

ஆகஸ்ட் மாதம் 14 ம் தேதி பாப்புலர் மிஷன் தியானத்திற்காக மக்களை ஆயத்தப்படுத்த வின்செந்தியர் சபையை சேர்ந்த அருட்தந்தை லிஜோ அவர்கள் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றி அறிவுரைகள் வழங்கினார்கள். 21 ஆம் தேதி அருட்தந்தை எட்வர்டு வருகைதந்து பங்குதந்தையுடன் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார். பின்னர் தியானத்திற்கான திருக்கொடி ஏற்றப்பட்டது. 28 ஆம் தேதி பாப்புலர் மிஷன் தியானம் திருப்பலியுடன் தொடங்கியது. திருப்பலி முடிந்த உடன் குத்துவிளக்கு ஏற்றி; சிலுவை, பைபிள் மற்றும் வின்சென்ட் தே பவுலின் சொரூபம் பவனியாக எடுத்து வரப்பட்டு தியானம் தொடங்கியது. செப்டம்பர் 2 ம் தேதி தியானம் பல வழிபாடுகள் மற்றும் அன்பின் விருந்துடன் நிறைவுற்றது. தியானத்திற்கான அனைத்து ஆயத்தங்களையும் பங்குதந்தை தோமஸ் தெக்கேத்தலா மற்றும் தியானப் பொறுப்பாளர் திரு சுனில் மற்றும் திருமதி ஷைலா செய்தனர்.



## களியல்

### ▶ புனித சூசையப்பர் தேவாலயம் – காரோடு.

ஆகஸ்ட் மாதம் 21 ம் தேதி மாதிர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான விவிலிய வசனம் எழுதும் போட்டி ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பங்குதந்தை அருட்தந்தை அஜீஷ் அட்டியில் மற்றும் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி கிளாராமா SDS இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்

### ▶ புனித லூர்து அன்னை ஆலயம், சேனங்கோடு.

ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி குலசேகரம் புனித இரண்டாம் ஜான்பால் ஆலயம் மற்றும் சேனங்கோடு புனித லூர்து அன்னை ஆலயம் இணைந்து தாய் கன்னி மரியாவின் விண்ணேற்பு தினம் மற்றும் சுதந்திர தின விழா சேனங்கோடு புனித லூர்து அன்னை ஆலயத்தில் நடைப்பெற்றது. மாலை 5.30 மணிக்கு அருட்தந்தை கிறிஸ்துதாஸ் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தூய கன்னிமரியாவைக் குறித்த சிறந்ததொரு மறையுரையும் நடைபெற்றது. திருப்பலி நிறைவடைந்தவுடன் ஆலயத்தை சுற்றி ஆடம்பர ஜெபமாலை பவனி நடைபெற்றது. இது புனித லூர்து அன்னையின் குருசடியில் நிறைவுற்றது. இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கபட்டது.

### ▶ திருஇருதய தேவாலயம், பள்ளிக்கோணம்

அன்னை மரியாவின் விண்ணேற்பு பெருவிழா மற்றும் சுதந்திர தின விழாவை முன்னிட்டு காலை 7 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து பங்குத்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் CMI அவர்கள் தலைமையில் தேசிய கொடியை ஏற்றி இனிப்பும் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மறைக்கல்வி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. கலைநிகழ்ச்சியில் மாணவ மாணவியர்கள் தேசிய தலைவர்களின் வேடமணிந்து வந்தது

கண்கொள்ளா காட்சியாக இருந்தது. பின் மறைக்கல்வி மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இறுதியில் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

***புனித எவுபிராசியம்மாவின் திருநாள் கொண்டாட்டம்***

22.08.2022 முதல் 28.08.2022 வரை புனித எவுபிராசியம்மாவின் திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு தினமும் மாலை 6 மணிக்கு ஜெபமாலை, திருப்பலி. அதனைத் தொடந்து நவநாள் ஜெபங்களும் நடைபெற்றன. இறுதி நாளாகிய ஆகஸ்ட் 28 அன்று மறைக்கல்வி மாணவ மாணவியர்களுக்கு போட்டிகள் நடைபெற்றன. முதல் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவ மாணவியர்களுக்கு புனித எவுபிராசியம்மாவின் பொன் மொழிகள் ஒப்புவித்தல் போட்டியும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவ மாணவியர்களுக்கு புனித எவுபிராசியம்மாவின் வாழ்க்கை வரலாறு பற்றிய பேச்சு போட்டியும் நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பங்குதந்தை அவர்கள் பரிசுகளை வழங்கினார். போட்டி ஏற்பாடுகளை அருட்சகோதரி றோஸ்லெட் CMC மற்றும் அருட்சகோதரி லீனா CMC அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்

## தூசைபுரம்

- **கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்**

ஆகஸ்ட் 4 ஆம் தேதி புனித ஜாண் மரிய வியானி தினம் அருள்தந்தையர்கள் தினமாக பங்கில் கொண்டாடப்பட்டது. பங்குதந்தை ஜாண்பால், இப்பங்கில் பணியாற்றி இறந்துபோன அருள்தந்தையர்களுக்காக சிறப்பாக திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

ஆலய செயல்பாடுகள் குறித்து ஆலோசிக்க, ஆகஸ்ட் 9ஆம் தேதி மாலை 6 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் உறவிய தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஆகஸ்ட் 15 இல் இந்திய திருநாட்டின் 75 ஆவது சுதந்திர தினம், தூய மரியன்னையின் விண்ணேற்பு தினம் மற்றும் ஆலய விரிவாக்கப் பணிகளுக்கான பரிசு குலுக்கல் ஆகிய முப்பெரும்

விழாக்கள் நடைபெற்றன. காலை 7 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் திருப்பலி, தொடர்ந்து மாலை 3 மணிக்கு ஜெபமாலை 4 மணிக்கு பங்கு இளையோர் மற்றும் மாணவர்கள் இணைந்து நடத்திய கலைநிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெற்றது. 4.30 மணியளவில் பங்கு ஆலய விரிவாக்க பணிகளுக்கான பரிசு குலுக்கல் நடைபெற்றது. இதனை பங்குத்தந்தை தலைமையில் பங்கு இளையோர் முன்னின்று நடத்தினார்கள்.

மாதத்தின் 3 ஆவது சனிக்கிழமை வழக்கமாக நடந்து வந்த நற்செய்தி கூட்டம் மீண்டும், ஆகஸ்ட் 20 ஆம் தேதி நடைபெற்றது. அதனை சீனாய் தியான குழுவினர் வழி நடத்தினார்கள். மறைவட்ட பங்குகளிலிருந்து திரளான மக்கள் அன்று நடந்த திருப்பலி, தியானம், ஒப்புரவு வழிபாடு ஆகியவற்றில் பங்கேற்றனர்.

கல்லுவிளையில் ஆகஸ்ட் 27 இல் நடந்த அன்னையருக்கான தியானத்திலும் 25 நபர்கள் பங்கேற்றனர்.

### *ஆலய வைரவிழா நிறைவு சிறப்புப் போட்டி*

ஆலய வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் மறைமாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டியானது, 2022 ஆகஸ்ட் 28 ஆம் நாள் சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வைத்து பங்குதந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் நடந்தது. காலை 10 மணியளவில் நடந்த இந்த போட்டியை சூசைபுரம் மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் தொடங்கிவைத்தார். மறைமாவட்ட அளவில் 12 குழுக்களுக்கிடையே நடந்த போட்டியில் முதல் பரிசு (ரூ 4000 மற்றும் கேடயம்) கிறிஸ்துராஜபுரம் கிங் ஸ்டார் அணியினருக்கும் இரண்டாவது பரிசு (ரூ 2000 மற்றும் கேடயம்) அன்ணிக்கரை புனித மத்தேயு அணியினருக்கும் கிடைத்தது.

போட்டியை நடத்த இசைவளித்த மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களுக்கும் உறுதுணை நின்ற மறைவட்ட பங்குத்தந்தை பேரருட்தந்தை

ஆன்றனி ஜோஸ் அவர்களுக்கும் போட்டிக்கு இளையோரை அனுப்பிவைத்த அனைத்து அருட்தந்தையர்களுக்கும் பங்கின் சார்பில் நன்றிகள். போட்டிகளை ஒருங்கிணைத்த பங்கு இளையோர்கள் செல்வன் பெனிஷ் மோன், செல்வன் ஸ்டார்வின் மற்றும் செல்வன் மெர்பின் ஆகியோருக்கும் பரிசுகளை நன்கொடை வழங்கிய முனைவர் ஜாக்குலின் மற்றும் திரு. பிராவின் ஆகியோருக்கும் பங்கின் சார்பில் நன்றியைத்தெரிவிக்கிறோம்

## தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

*01.08.2022* முதல் *15.08.2022* வரை மாதாவின் விண்ணேற்பு விழாவினை முன்னிட்டு திருப்பலி, நவநாள் மற்றும் ஜெபமாலை பவனி ஆகியவை நடைபெற்றது எல்லா நாட்களும் இறுதியில்



இனிப்பு நேர்ச்சை வழங்கப்பட்டது

*13.08.2022* சனிக்கிழமை மாலை *6* மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்களின் கூட்டம் நடைபெற்றது.

ஆகஸ்ட் *14* ம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின்னர் பங்குத்தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தலைமையில் பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது.

*15.08.2022* அன்று மாதாவின் விண்ணேற்பு விழா தேவமாதா குருசடி ஆண்டு விழா இந்திய சுதந்திர தின விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் பங்கின் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

ஆகஸ்ட் 2 ம் தேதி முதல் மாதாவின் விண்ணேற்பு விழாவை முன்னிட்டு குருசடியில் சிறப்பு ஜெபமாலை நடத்தப்பட்டது. ஆகஸ் 15 அன்று மாதாவின் விண்ணேற்பு விழாவை முன்னிட்டு மாலை 5:30 மணிக்கு அருட்தந்தை பிரின்ஸ் தலைமையில் ஆடம்பர திருப்பலி மற்றும் ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 21 ம் தேதி திருப்பணியாளர்களுக்கு கூட்டம் நடைபெற்றது.

ஆகஸ்ட் 28 ம் தேதி வாழிபிலாவிளை உறவிய ஆண்டு விழா அருட்தந்தை பிரின்ஸ் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. உறவிய மக்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன இறுதியில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டன.

## நித்திரவிளை

### ஜெயமாதா மறைவட்ட ஆலயம் – நித்திரவிளை

அன்னை மரியாவின் விண்ணேற்பு விழாவும் பங்கின் 62 ஆவது ஆண்டு விழாவும், 2022 ஆகஸ்ட் மாதம் 8-ம் தேதி முதல் 15 ஆம் தேதி முடிய 8 நாட்கள் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதற்கு ஆயத்தமாக ஜூலை 30-ம் தேதி முதல் ஆகஸ்ட் 7 ஆம் தேதி முடிய 9 நாட்கள் அமலபுரி பொன்விழா குருசடியில் ஜெபமாலையும் நவநாள் ஜெபமும் நற்செய்திப் பெருவிழாவும் ஜெபமாலை பவனியும் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் பங்கு மக்கள் அனைவரும் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றனர். பங்குபெருவிழாவும் குடும்ப விழாவும் திருக்கொடியேற்றத்துடன் 8 ஆம் தேதி ஆரம்பமானது. நமது மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் முதல் நாள் திருப்பலி, குழந்தைகளுக்கு திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் அருளடையாளங்களை வழங்கினார்கள். தொடர்ந்து எல்லா நாட்களிலும் திருப்பலி, ஜெபமாலை மற்றும் நவநாள் ஜெபமும் நடைபெற்றது. ஆகஸ்ட் 4 ஆம் தேதி காலைத்தொழுகையை தொடர்ந்து 10.00 மணிக்கு ஆடம்பரத் திருப்பலி மற்றும் முதல் திருவிருந்து வழங்குதல் போன்றவை குருகுல முதல்வர்

பேருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு ஜெபமாலை, நற்கருணை ஆசீர் நடைபெற்றது. தொடர்ந்து மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா அருட்தந்தை அபிலாஷ் சேவியர் (மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர்) அவாகள் தலைமைதாங்கி சிறப்பித்தார்கள். ஆகஸ்ட் 15-ம் தேதி காலை 8.30 மணிக்கு தேசிய கொடி ஏற்றப்பட்டது. காலை 9.00 மணிக்கு காலைத்தொழுகை தொடர்ந்து பேரருட்தந்தை ஜேம்ஸ் பன்னாங்குழி OSB அவர்கள் தலைமையில் இராசாதிருப்பலி நடைபெற்றது. திருப்பலி நிறைவில் மாதா தேர்ப்பவனி அனைத்து இறைமக்களும் பங்கு கொள்ள மிகசிறப்பாக நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு ஜெபமாலை பவனியும் நவநாள் ஜெபமும் நடைபெற்றது. மாலை 7.00 மணியளவில் திருக்கொடி இறக்குதல் நிகழ்வு மிகச்சிறப்பாக நடைபற்றது. அனைத்து இறைமக்களும் இத்திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பித்து இறையாசீர் பெற்று மகிழ்ந்தனர்.

## புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

முன்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் எல்லா வியாழக் கிழமையும் ஜெபமாலை திருப்பலி மற்றும் ஆடம்பர நற்கருணை ஆராதனையும் நற்கருணை பவனியும் குணமளிக்கும் மன்றாட்டும் நடைபெற்று வருகிறது. 14-08-2022 அன்று மறைக்கல்வி மாணவர்கள் சார்பாக புனித தோமையார் தினவிழா (துக்ரான



திருநாள்) மற்றும் புனித அல்போன்சா திருவிழா ஆகிய விழாக்கள் கொண்டாடப்பட்டது திரு சுகுமாரன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மறைக்கல்வி மாணவர்கள் பாடல், கதை, நடனம், ரம்பான் பாட்டு மற்றும் பல கலைநிகழ்ச்சிகள் மூலம் தங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்து மகிழ்ந்தனர். அனைத்து ஆசிரியர்களும் இதற்கு வழிகாட்டிகளாக செயல்பட்டார்கள். இறுதியாக தந்தையவர்கள் வாழ்த்துக் கூறி அனைவரும் ஆசி வழங்கினார்கள். பின்னர் பாப்பரசர் கீதத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

21-08-2022 அன்று மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் அவர்கள் நமது மறைக்கல்வி நிலையத்தைப் பார்வைவிட வருகை தந்தார்கள். காலை 8 மணிக்கு திருப்பலி நிறைவேற்றி ஜெபித்தார்கள். பின்னர் அனைத்து வகுப்புகளையும் பார்வையிட்டு வினாக்கள் கேட்டு உற்சாகப்படுத்தியதோடு இறையழைத்தல் என்றால் என்ன, அதனால் நமக்கு கிடைக்கும் நன்மை என்ன என்பதைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். பின்னர் ஆசிரியர் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் அவர் பார்வைபட்டதின் அடிப்படையில் மறைக்கல்வி நிலையத்தின் நிறைகுறை பற்றி கலந்துரையாடினார். இறுதியாக ஆசிரியர் திரு. வின்சென்ட்ராஜ் அவர்கள் நன்றி கூறினார். அன்றைய தினம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஒரு புது அனுபவமாக அமைந்தது.

ஆகஸ்ட் 27 ஆம் தேதி கல்லுவிளயில் நடைபெற்ற தியானத்தில் சுமார் 15 தாய்மார்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### ▶ புனித அந்தோணியார் ஆலயம் – வயலங்கரை.

ஆகஸ்ட் 3-ம் தேதி முதல், மாதத்தின் எல்லா முதல் புதன் கிழமைகளிலும் மாலை திருப்பலியும் மாதா நவநாளும் ஜெபமாலைப் பவனியும் ஆரம்பமானது.

வயலங்கரை Mother Therasa Pallitative care புதிய பொறுப்பாராக அருட்சகோதரி சஜிதா ASMI பொறுப்பேற்றார்கள். முன்னாள்

பொறுப்பாளர் அருட்சகோதரி டெஸ்மரியா ASMI அவர்கள் இடம் மாறுதலாகி புஷ்பகிரி (கேரளா) மருத்துவமனைக்குச் சென்றார்கள். ஆகஸ்ட் 7 ஆம் தேதி தாய்மார்களுக்காக குறிப்பாக பெண்களுக்காக பாலியல் கல்வி (Health Body, Hygiene and Sex Education) Dr. Betty அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சுமார் 50 கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.



ஆகஸ்ட் 14ம் தேதி வின்சென்ட் தே பவுல் சபையின் சார்பாக மாணவர்களுக்கு வினாடி வினா போட்டி நடைபெற்றது. பல மாணவர்கள் வெற்றிபெற்றனர்.

மேலும் ஆகஸ்ட் 14ம் தேதி அரசு வேலைவாய்ப்பு தேட என்னென்ன கல்வி தேவை என்பதை விளக்கும் விதமாக மார்த்தாண்டம் மறைமாவட்டம் St Paul's IAS Academy சார்பில் பயிற்சி முகாம் நடைபெற்றது. ஆலய மக்கள் அனைவரும் கலந்துக் கொண்டனர்.

ஆகஸ்ட் 27 ஆம் தேதி தாய்மார்களுக்காக கல்லுவிளையில் நடைபெற்ற தியானத்தில் சுமார் 25 தாய்மார்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்

அருட்தந்தை, அருட்சகோதரிகள் மற்றும் குருமாணவர்கள் இணைந்து வீடு சந்தித்தல் மற்றும் ஜெபமாலை செபிக்கும் நிகழ்வு அருமையாக நடைபெற்று வருகிறது. இதன் சிறப்பு என்னவெனில் மாதாவின் உருவம் ஏந்தி ஒருவீட்டிற்கு சென்று ஜெபிப்பது ஆகும். மேலும் எல்லா ஞாயிற்றுக்கிழமையும் இரண்டு உறவியங்கள் வீதம் உறவியக்கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

# இதர செய்திகள்

- SABS அருட்சகோதரிகள் தலைமையில் 14 ஆகஸ்ட் 2022 அன்று சூசைபுரம் பங்கில் ஒரு நாள் மருத்துவ முகாம் நடைபெற்றது.

- அருட்சகோதரி. மேரி லதா FCC அவர்களின் மூத்த சகோதரர் திரு. T.ஜேம்ஸ் (52), 27 ஆகஸ்ட் 2022 அன்று நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டுள்ளார். அவரது குடும்பத்தினர் மற்றும் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனிடம் வேண்டுவோம்.

- செப்டம்பர் மாதம் 23 முதல் 25 வரை தேவசகாயம் மவுண்ட் மற்றும் நமது மறைமாவட்டத்திற்கு காக்கநாட்டில் இருந்து உயர் பேராய கூரியா உறுப்பினர்கள் வருகை தர உள்ளனர்.

- கடந்த 5 முதல் 10 ஆண்டுகளுக்குள் பட்டம் பெற்ற அருட்தந்தையர்களுக்கான உருவாக்கல் பயிற்சி காக்கநாடு மவுண்ட் செயின்ட் தாமஸ் இல் மவுண்டில் 2022 செப்டம்பர் 12 முதல் 21 வரை நடைபெற உள்ளது. இதில் நமது மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தையர்கள் டோபின், ஜோமோன், கொச்சுமோன், சாஜன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

- 25 செப்டம்பர் 2022 அன்று மறைமாவட்ட சுகாதார ஆணையம் மஞ்சாலுமூடு ஆலயத்தில் Care your Heart Health இலவச மருத்துவ பரிசோதனை முகாமை நடத்துகிறது. கேரள மாநிலம் செங்கனூரில் உள்ள டாக்டர் கே.எம்.செரியன் மருத்துவ அறிவியல் கழகத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் முகாமை நடத்துகின்றனர்.

- காஞ்சிரப்பள்ளி மாகாணத்தின் இயேசுவின் திருஇருதய அருட்சகோதரிகள் அக்டோபர் மாதம் 1ம் தேதி முதல் தேனி மாவட்டம் கம்பத்தில் தங்கள் இறைபணியை தொடங்க உள்ளனர்.

## BISHOP'S ENGAGEMENTS SEPTEMBER 2022

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Thu | | Bishop's House |
| 2 | Fri | 03.30 pm<br>05.30 pm | Nagercoil: Marriage Reception<br>Mulagumoodu: Feast Day Holy Qurbana |
| 3 | Sat | 6.30 pm | Bishop's House: Reception to CMC Mother General |
| 4 | Sun | 02.00 pm<br>09.30 pm | Kalluvilai: Church Blessing<br>>> Thrissur |
| 5 | Mon | | Thrissur: CBCI Health Commission Meeting |
| 6 | Tue | | Thrissur: CBCI Health Commission Meeting |
| 7 | Wed | 02.30 pm<br>05.30 pm | Curia Meeting<br>Kaliyal: Feast day Holy Qurbana |
| 8 | Thu | 06.00 pm | Killioor: Feast day Holy Qurbana |
| 9 | Fri | 10.00 pm<br>05.30 pm | Kalluvilai: Governing Body Meeting<br>Mukkalam: Feast day Holy Qurbana |
| 10 | Sat | 10.00 am<br>05.30 pm | Varuthattu: Blessing of Renovated Church and Grotto<br>Cheenivilai: Feast day Holy Qurbana |
| 11 | Sun | 05.00 pm | Mekarai: Presbytery Blessing and Mission Meeting |
| 12 | Mon | 10.00 pm<br>03.00 pm | Nalamchirai: Benefactor House Visit<br>Bishops House: Forane Vicars' Meeting |
| 13 | Tue | 09.30 am | Sangamam: Priests Conference |
| 14 | Wed | 09.30 am<br>05.30 pm | Curia Meeting<br>Malaicode : Feast of Mar Sleeva Holy Qurbana |

| | | | |
|---|---|---|---|
| 15 | Thu | | Parish Visit |
| 16 | Fri | 10.00 am | 10th ANNIVERSAREY OF EPISCOPAL ORDINATION |
| 17 | Sat | 10.00 am | Nagercoil: CBCI Women's Commission Annual General Body Meeting |
| 18 | Sun | 12.30 pm | Madurai: Blessing of Multipurpose Hall |
| 19 - 22 | Mon | | Parish Visit |
| 23 | Fri | | KAKKANAD CURIA VISIT |
| | | 06.30 pm | Chetticharvilai: Feast day Holy Qurbana |
| 24 | Sat | 09.30 am | PADANTHALUMOODU: PRIESTS AND RELIGIOUS SANGAMAM |
| | | 03.00 pm | Nagercoil: KKMS Manadu at Scott Christian College |
| | | 06.00 pm | Nagercoil: Catholic Doctors Forum Meeting |
| 25 | Sun | | KAKKANAD CURIA VISIT |
| | | 06.30 am | Thettivilai: Holy Qurbana and Blessing of the Bell Tower |
| | | 10.00 am | Manjalumoodu: Diocese Health Commission Care Your Heart Medical Camp |
| 26 | Mon | 09.30 am | Soosaipuram: College Graduation day |
| | | 06.00 pm | Kattathurai: Feast day Holy Qurbana |
| 27 | Tue | 10.00 am | Curia Meeting |
| | | 05.00 pm | Padanthalumoodu: Marriage Reception |
| 28 Sept – 13 Nov | | | USA: VISITING THE SYROMALABAR COMMUNITIES |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**




NAGERCOIL, ST. ALPHONSA ACADEMY,
COMPETITION 13.08.2022



PRESBYTERAL COUNCIL, 30.08.2022




THETTIYODE, GOLDEN JUBILEE, 14.08.2022



SMYM CAMP, SANGAMAM 19,20,21.08.2022



POPULAR MISSION RETREAT,
INAUGURATION, PILANKALAI 28.08.2022

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570